DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 9

| | |
|---|---|
| Name | : Dr.P.Prasanna |
| Father's Name | : Parthasarathy |
| Age | : 37 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 27th day of November, 2025.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.04.2024 அன்று பணியிலிருந்தபோது கோயம்பேடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடமிருந்து குற்ற எண் 161/2024 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட மிக்கேல் துரைப்பாண்டி சுமார் 51 வயதுடைய ஆண் பிரேதத்தை பிரேதப் பரிசோதனை செய்ய விண்ணப்பத்தினை காவலர் 53521 திரு.நாகராஜன் என்பவர் மூலம் பெற்று அவர் அடையாளம் காட்டிய பிரேதத்தை பிற்பகல் 12.10 மணியளவில் பிரேதப்பரிசோதனை செய்ய தொடங்கினேன். பிரேதத்தின்மீது மரணவிறைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதம் சாதாரண உடலமைப்புடன் சீராகவும், கை மற்றும் கால் நகங்கள் வெளிரியும் காணப்பட்டது.

ரத்தம் தோய்ந்த திரவம் வாய் மற்றும் மூக்கில் காணப்பட்டது. பிரேதத்தின்மீது காணப்பட்ட இறப்புக்குமுன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1.கன்றியகாயம் 11x8 செ.மீ அளவில் இடதுபக்க ஆக்ஸிபிட்டல் பகுதியில் காணப்பட்டது மற்றும் கன்றிய காயத்தின்மீது சிதைந்த காயம் ஒன்று 1x1X1 செ.மீ அளவில் காணப்பட்டது.

2.சீராய்ப்பு காயங்கள் பின்வருமாறு 10x5 செ.மீ அளவில் வலது தோள்பட்டையின் பின்புறத்திலும், 4x2 செ.மீ அளவில் கழுத்தின் பின்புறத்திலும், 3x2 செ.மீ அளவில் இடது பெரு கட்டைவிரலின் மற்றும் 1x1 செ.மீ அளவில் இடது பெரு கட்டைவிரலின் நுனியில் காணப்பட்டது.

3.கழுத்துப் பகுதி பரிசோதனையில் கழுத்தின் முள்எலும்பு C1 மற்றும் C2 உடைந்தும் அதைச்சுற்றி கன்றிய காயத்துடன் காணப்பட்டது,

4.மார்பகப்பகுதி மற்றும் வயிற்றுப்பகுதி பரிசோதனையில் லம்பார் முள்எலும்பு L1 உடைந்தும் அதைச்சுற்றி கன்றிய காயத்துடன் காணப்பட்டது. அதன்அடிப்பகுதியில் அமைந்திருந்த முதுகுத்தண்டுவடம் சிதைந்தும் காணப்பட்டது.

5.தலைப்பகுதி பரிசோதனையில் தலையின் தோளின் அடிப்பகுதியில் முழுவதிலும் முழுஅளவிலும் கன்றிய காயத்துடன் பின்பக்க தலையிலிருந்து கழுத்துப்பகுதிவரை காணப்பட்டது. மூளைச்சவ்வில் மேல்புறம் மற்றும் அடிப்புறத்தில் ரத்தம் கசிந்தும் காணப்பட்டது. ஒரு கோடுபோன்ற எலும்புமுறிவு ஆக்ஸிபிட்டல் எலும்பின் உட்பகுதியில் காணப்பட்டது.

இதர கண்டறிவுகள் வயிற்றுப்பகுதி, மார்பகப்பகுதி மற்றும் இருதயப்பகுதி எந்தவித திரவமுமின்றி காணப்பட்டது. மூச்சுக்குழாய் மற்றும் தொண்டைக்குழாய் சீராகவும், நாவடி எலும்பு மற்றும் இதர குருத்தெலும்புகள் சீராகவும், உணவுக்குழாய் சீராகவும் காணப்பட்டது. இருதயம் சீராகவும் அதன் மேல்புறத்தில் கிரே மற்றும் வெள்ளைநிறப் பகுதிகள் காணப்பட்டது. இருதயத்தின் ரத்தநாளங்களில் கொழுப்பு படிமங்கள் காணப்பட்டது. இரைப்பையில் 30.மி.லி பழுப்புநிற திரவம் பழச்சாறு வாடையுடன், அதன்

உட்பகுதி வெளிரியும் காணப்பட்டது. நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம் மற்றும் மூளை சீராகவும் அதன் உட்புறம் வெளிரியும் காணப்பட்டது.

சிறுகுடலில் 30 மி.லி பழுப்புநிற திரவம் பழச்சாறு வாடையுடன் அதன் உட்பகுதி வெளிரியும் காணப்பட்டது. தலையின் மேல்தோள் சீராகவும், கபாலம் சீராகவும் காணப்பட்டது. சிறுநீரகப்பையில் 10 மி.லி.சிறுநீருடன் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது.

<u>**இறுதிக் கருத்து**</u>

மேலே குறிப்பிடப்பட்ட நபர் அதிக காயங்கள் ஏற்பட்ட காரணத்தினால் அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டு இறந்திருக்கக்கூடும் என்று மற்றும் உள்ளுறுப்புகளில் எத்தில் ஆல்கஹால் காணப்பட்டது என்றும் கருத்துக்கூறி சான்று வழங்கினேன். அந்த பிரேதப் பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.4.** இறுதிக் கருத்துரை **அ.சா.ஆ.5.** உடல் உள்ளுறுப்புகள் அறிக்கை **அ.சா.ஆ.6.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஒருநபரை உயரமான இடத்திலிருந்து கீழே தள்ளிவிடும்போது இறந்துவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**</u>

இறந்தவரின் உடலை நான் 12.10 மணியளவில் பார்த்தேன். நான் 13 ஆண்டுகளாக சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பணிபுரிந்து வருகிறேன். நான் எத்தனை பிரேதப் பரிசோதனை செய்துள்ளேன் என்றால் 5000 க்கு மேல் இருக்கும். இறந்தவரின் உடலில் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது. என்னை விசாரித்த காவல் ஆய்வாளரின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. தேதி ஞாபகமில்லை. என்னை போலீசார் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரேதப்பரிசோதனை அறிக்கையில் பிரேதத்தை முதன்முதலில் நான் பார்த்த தேதியில் மாதம் அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்தநபர் உடலில் எத்தில் ஆல்கஹால் இருந்ததால் அவர் போதையில் இருக்க

வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போதையில் ஒருநபர் தடுமாறி மேலிருந்து கீழே விழுந்தால் இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்புள்ளது.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |